https://tamileelamarchive.com/

«UTHAYAM»
Boks 4366
5013 NYGÅRDSTANGEN

# இந்திய இலங்கை ஒப்பந்தமும் தமிழீழமக்களும்

இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இவ்வருடம் யூலை மாதம் 29ஆம் திகதியன்று ராஜீவ் காந்தியினாலும், ஜயவர்த்தனவாலும் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தினை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக எதிர்த்தபோதிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், சில போலிக் கைக்கூலிக் குழுக்களும் ஏற்று ஆதரித்தன. மறுபுறத்தில் இலங்கையின் தென்பகுதிகளில் சிங்கள மக்களிடையே பெரும் எதிர்ப்புக்கள் எழுந்த அதேவேளையில், இந்தியாவில் தமிழகத்தில் ராஜீவ் காந்தியும், அவரது இந்திரா காங்கிரஸ் கட்சியும் பெரும் வெற்றி விழா கொண்டாடினர். ஆனால், பெரும்பான்மையான எமது மக்களுக்கோ அல்லது தமிழக மக்களுக்கோ இப்படியான வேறுபட்ட கருத்துக்கள் எழுந்ததுபற்றியும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தாற்பரியங்களும் விளங்காத நிலையே இருந்துவருகிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தந்தத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதையே சரியாகத் தெரியாத நிலையிலும், இந்த ஒப்பந்தம் எவர்களின் நலன்களுக்கும், எவர்களது அழிவுகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை சரியாக விளங்காத நிலையிலும், வெளிநாடுகளில் சில போலிக் குழுக்களின் கைக்கூலிகள் எமது மக்களுக்குப் பொய்யான விளக்கங்களை கொடுத்துவருகின்றனர். மறுபுறத்தில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையே படிக்காத சில அரசியல் அறிஞர்களும் (?), அரசியல் வட்டாரங்களும்(?) இந்த ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்படவிருக்கும் தமிழரின் வருங்காலத்தைப் பற்றியும், தமிழர்கள் அனுபவிக்க இருக்கும் ஜனநாயகத்தைப் பற்றியும், தமிழரின் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்தைப்பற்றியும் பலவித விளக்கங்களைக் கொடுப்பதுடன், வெளிநாடுகளில் பலவித விவாதங்களையும் நடாத்துவதை நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவர்கள் தம்மை நிகழ்காலத்தில் வைத்துக்கொள்ளாது, வருங்காலத்தில் மாத்திரமே வைத்துக்கொள்வதை எமது மக்கள் உணரவேண்டும். இப்படியான போலி நடவடிக்கைகளும், சிந்திக்காது செயற்படும் தன்மையும் எமது மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் எந்தவிதத்திலும் பயனளிக்கப்போவதில்லை. இவைகள் உண்மையில் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை எமது மக்கள் உணரவேண்டும். இன்றைய நிலையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தமிழீழ மக்கள் சரியாக விளங்கி, ஆராய்ந்து செயற்படுவதன்மூலமே எமது மக்களின் சமூக, பொருளாதார, அரசியற் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வையும், நிரந்தர அமைதியையும் ஏற்படுத்திக்கொள்ளமுடியும்.

தமது சுத்த சுயநல போக்கினாலும், எந்தவித அரசியல் ஆராய்வுகளுமின்றி எமது முன்னைய தலைமுறைகள் சுதந்திரமற்ற, நிம்மதியற்ற, அடிமைத்தனமான பாரச்சுமைகளை எமது தலைமுறைமீது சுமத்தியுள்ளன. எமது அறியாமையாலும், சுயநல போக்கினாலும் நாமும் அதே பாரச்சுமைகளை எமது அடுத்த தலைமுறைமீது திணித்துவிடுவது பெரும் பிழையான செயற்பாடாகும். எமது மக்களின் அறியாமையையும், சுயநலப் போக்கினையும் சாதகமாகப் பயன்படுத்தி, தமது சுயநலங்களையும், அதிகார வேட்கைகளையும் தீர்க்க முற்படும் சில சந்தர்ப்பவாதிகளும், பூர்சுவாசியக் கும்பல்களும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் உண்மை நிலையை மக்களுக்குச் சரியாக விளக்காது, பொய்யான விபரங்களையும் விளக்கங்களையும் கொடுத்துவருகின்றனர். மக்களது அறியாமையைப் பயன்படுத்தி, அதே மக்களின் வாக்குகளினால் அதிகாரத்தைக் கைப்பற்றி, அதே மக்கள்மீது சவாரி செய்வது ஜனநாயகமும் அல்ல உண்மையான மக்கள் ஆட்சியும் அல்ல. உண்மையான மக்கள் ஆட்சியிலேதான் ஜனநாயகம் இருக்கமுடியும். தமதும், தமது வருங்காலச் சந்ததியினரதும் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் போராடும் தமிழீழ மக்கள் தாம் தொடர்ந்தும் ஏமாறுது பார்த்துக்கொள்வதுடன், தம்மை அறியாமையிலிருந்தும் விடுவித்துக்கொள்ளவேண்டும்.

இந்தநிலையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பவை எவை ?, இதில் இந்தியாவினது என்னென்ன கோரிக்கைகளை சிறீ லங்க அரசு நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது ?, இதற்குப் பிரதியுபகாரமாக சிறீ லங்கா அரசினது என்னென்ன கோரிக்கைகளை இந்திய மத்திய அரசு நடைமுறைப்படுத்த இணங்கியுள்ளது ?, இந்திய மத்திய அரசினதும் சிறீ லங்க அரசினதும் இந்த இணக்கங்களினால் தமிழீழ மக்களின் பிரச்சனைகளுக்கு எப்படியான தீர்வு காணப்பட முயற்சிக்கப்படுகிறது ?, இந்தத் தீர்வினால் தமிழீழ மக்கள் எந்த நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் ?, இதனால் தமிழீழ மக்கள் சுதந்திரமான, நிம்மதியான, அமைதியான வாழ்வைப் பெறமுடியுமா ?, தமிழீழ மக்கள் தமது சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றங்களையும், மேம்பாடுகளையும் அடையமுடியுமா ? என்பவற்றையெல்லாம் எமது மக்கள் சரியாக ஆராய்ந்து, விளங்கிச் செயற்பட வேண்டியுள்ளது.

இவற்றை ஆராய்ந்து, விளங்கிக்கொள்வதற்கு பக்கங்கள் 6, 7, 8, 9, 10, 11 என்பவற்றில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மறுபிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் இருப்பதாலும், முக்கிய விடயங்களை குறிப்பாக கவனிப்பதற்கு அவைகள் கோடிடப்பட்டுள்ளன. எதுவிதத்திலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை எமது மக்கள் அனைவரும் விளங்கிக்கொள்வதற்கு, சில முக்கிய விடயங்கள் இங்கு ஆராயப்படுவதுடன், சில

https://tamileelamarchive.com/

அடிப்படை விளக்கங்களும் தரப்படுகின்றன.

## 2.0 இந்திய-இலங்கை ஒப்பந்தம்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை சற்று ஆழமாக ஆராய்ந்தோமேயானால், அங்கு இரண்டு முக்கிய அடிப்படை அம்சங்கள் மாத்திரமே அடங்கியிருப்பதை நாம் அவதானிக்கமுடியும். அவையாவன.

1) இந்தியாவின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அம்சம்.
2) சிறீலங்காவின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அம்சம் என்பன.

இந்தியாவினதும், சிறீ லங்காவினதும் பாதுகாப்புகளை உறுதிப்படுத்தும் முக்கிய நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட இந்த உடன்பாட்டில், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட பிரச்சனை ஒரு இணை-அம்சமாக உள்ளது.

பக்கங்கள் 10,11 என்பவற்றில், பந்தி இரண்டில், பகுதிகள் I, II, III, IV என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருப்பவைகள் இந்தியாவின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அம்சங்களாகும். இவைகள் கீழ் தரப்பட்டிருக்கும் விடயங்களைக் குறிக்கின்றன.

1) வெளிநாட்டு இராணுவத்தினரும், உளவுப்படையினரும் சிறீ லங்காவுடன் தொடர்புடையது பற்றியும், கூலிக்கமர்த்துவது பற்றியும், சிறீ லங்கா, இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பாதகம் விளைவிக்காத விதத்தில், ஒருவித புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்வது.
2) திருகோணமலை அல்லது சிறீ லங்காவின் எந்தவொரு துறைமுகமும் இந்தியாவினது நலனுக்கு முரணை முறையில் எந்தவொரு வேற்று நாட்டினது இராணுவ-பாவனைக்கும் அனுமதிக்காது பார்த்துக்கொள்வது.
3) திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கிகளை மீளத்திருத்தல், இயக்கும் வேலைகள் இந்தியாவும், சிறீ லங்காவும் இணைந்து மேற்கொள்ளல்.
4) சிறீ லங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் ஒலிபரப்புச் சாதனங்கள் இராணுவ தேவைகளுக்கோ அல்லது உளவு வேலைகளுக்கோ பயன்படுத்தாது, மக்களுக்கு ஒலிபரப்பும் சாதனமாக மாத்திரம் அமையும்படி, சிறீ லங்காவிற்கும் வெளிநாட்டு ஒலிபரப்பு ஸ்தாபனங்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உடன்பாடுகளை மாற்றி அமைப்பது.

என்பனவாகும்.

இவை நான்கும், இந்தியாவின் இராணுவ-நடவடிக்கை ரீதியான பாதுகாப்பினை ஏற்படுத்தும் விடயங்களாகும். சுருங்கக் கூறின், இவை இந்தியாவின் சுய நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தினையே கொண்டவை. இந்தியா தனது சுய பாதுகாப்பிற்கு இந்த ஒப்பந்தத்தை சிறீ லங்காவுடன் ஏற்படுத்திக்கொள்வதில் எந்த வித தவறும் இல்லை. ஆனால், தனது சுய நலன்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு இந்தியா வேறு ஒரு தேச மக்களின் சுதந்திரத்தையும், விடுதலையையும் நசுக்குமுற்படுமேயாயின், அது இந்திய மத்திய அரசினது சுத்த சுயநல போக்கினையும், அடக்குமுறைப் போக்கையுமே அப்பட்டமாக வெளிப்படுத்தும். இந்த நிலையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவா மக்கள்மீது மேற்கொள்ளும் அடக்குமுறைக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியம் கிரனடா தீவின் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைக்கும், பாசிச தென்-ஆபிரிக்கா அயல் நாடுகளின்மீது மேற்கொள்ளும் அடக்கு முறைக்கும், ருஷ்சியா ஆப்கானிஸ்தான் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைக்கும் இந்திய மத்திய அரசினது போக்கிற்கும் எந்தவித வேறுபாடுகளும் அற்ற நிலையே ஏற்படும். இந்திய மத்திய அரசு தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதன் மூலம் தனது சுய இலாபங்களைத் தேட முற்படுமேயாயின், இந்திய மத்திய அரசினது இந்த நடவடிக்கை தமது சுய இலாபங்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமிய மக்களினது விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்பட்டதற்கும், ருஷ்சியா தனது சுய நலனுக்காக எதியோப்பியாவில் எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்படுவதற்கும் சரிசமனை நடவடிக்கையாகவே அமையும். இப்படியான போலிக் கொள்கைகளை இந்திய மத்திய அரசு தனக்கு அமைத்துக்கொண்டு, தென் ஆபிரிக்க கறுப்பு மக்களின் விடுதலைக்கும், பாலஸ்தீன மக்களின் விடுதலைக்கும் அதே இந்திய மத்திய அரசு ஆதரவு அளிக்க முற்படுவதாகக் கூறின், அது உலகின் மாபெரும் போலி நடவடிக்கையாகவே அமையமுடியும். இப்படியான நிர்ப்பந்தங்களின்கீழ், இந்திய மத்திய அரசு எந்தவிதமான நிலைப்பாட்டுடன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளது என்பதை நாம் அறிய வேண்டுமாயின், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இந்திய மத்திய அரசு சிறீ லங்க பாசிச அரசின் என்னென்ன கோரிக்கைகளை நிறைவேற்றச் சம்மதித்துள்ளது என்பதனை நாம் ஆராயவேண்டியுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை நாம் மீண்டும் பார்ப்போமேயானால், இந்திய மத்திய அரசு கீழ் தரப்படும் கோரிக்கைகளையே சிறீ லங்க அரசின் நலன்களைக் கருதி நடைமுறைப்படுத்த சம்மதித்துள்ளது என்பதை அறியமுடியும். (பக்கம் 6 இல் பகுதி 1.1 இனையும், பக்கம் 11 இல், பந்தி 3 இல் உள்ள பகுதி 1, 11 என்பவற்றைப்பார்க்கவும்.)

https://tamileelamarchive.com/

1) சிறீ லங்காவின் ஒருமைப்பாடு, இறைமை, பிராந்தியப் பிரிவுபடாமை என்பவை பேணிப்பாதுகாத்தல்.

2) பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது பிரிவினையை தூண்டும் நடவடிக்கைகள், அல்லது பிரிவினை என்பவற்றில் ஈடுபடுபவர்களாக காணப்படும் சிறீ லங்க பிரஜைகள் நாட்டிற்குத் திருப்பி அனுப்புதல்.

3) சிறீ லங்க பாதுகாப்பு படைகளுக்கு இந்தியா பயிற்சிகள் அளிப்பதுடன், இராணுவ தளபாடங்களையும் விநியோகிப்பது.

சிறீ லங்காவினது பாதுகாப்பினைப் பொறுத்தமட்டில், தமிழீழ மக்கள் தமது விடுதலைக்குப் போராடும் இந்த காலகட்டத்தில், 2,3 என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருப்பவை உண்மையில் இரண்டாவதுதர கோரிக்கைகளே. சிறீ லங்காவினது பாதுகாப்பானது உண்மையில், சிறீ லங்காவினது ஒருமைப்பாடு, இறைமை, பிராந்திய பிரிவுபடாமை என்பவற்றை பேணிப் பாதுகாப்பது என்பதில்தான் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறீ லங்க பாசிச அரசிடம் இருந்து தனது சுய இலாபங்களைப் பெற்றுக்கொண்ட இந்திய மத்திய அரசு, <u>சிறீ லங்காவிற்கு பாதுகாப்பினை ஏற்படுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நிலையில், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தினை முறியடிக்கவும், தமிழீழம் என்ற தனிநாடு அமைக்கப்படுவதை தடுக்கவும் சிறீ லங்க பாசிச அரசுடன் இணைந்து செயற்படவேண்டியுள்ளது</u>. இந்திய மத்திய அரசினது இந்த நிலைப்பாடானது உண்மையில் இந்திய மத்திய அரசு இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதோ அல்லது ருஷ்சியாவினதோ அல்லது நவ பாசிச தென் ஆபிரிக்காவினதோ நிலைகளில் எதனது நிலைக்குத் தள்ளியுள்ளது என்பதனை எமக்கு தெளிவுபடுத்துகிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி, சிறீ லங்காவினது பாதுகாப்புப் பேணிப்பாதுகாக்கப்படுவதற்கு தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்பட்டு, தமிழீழம் அமைக்கப்படுவது முறியடிக்கப்படவேண்டும். இதனை எப்படி மேற்கொள்வது?, இந்த முறியடிப்பு நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதில் இந்திய மத்திய அரசும், சிறீ லங்க அரசும் அவற்றினது படைகளும் எப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?, தமிழீழ விடுதலை போராட்டத்தினை முறியடிப்பதில் போராளிகளிடம் இருந்து எதிர்ப்புக்கள் ஏற்படுமாயின், இந்திய மத்திய அரசும், சிறீ லங்க அரசும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது? என்பவைகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஏனைய பகுதிகளில் எழுதப்பட்டுள்ளன.

இவற்றினைச் சுலபமாக விளங்கிக்கொள்ளவும், இந்திய மத்திய அரசினது அதன் நாசகார சக்திகளினதும் சதி நடவடிக்கைகளை சுலபமாக விளங்கிக்கொள்ளவும், இந்த சதி நடவடிக்கைகளில் ஈடுபடும் கைக்கூலிக் கும்பல்களைப்பற்றி சுலபமாக விளங்கிக் கொள்ளவும் நாம், இன்றைய நிலையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் எப்படியான முறையில் முறியடிக்கப்பட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதை சற்று ஆராய்வோம்.

<u>தமிழீழம் அமைக்கப்படுவது முறியடிக்கப்படவேண்டுமாயின், தமிழீழ விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்படவேண்டும். தமிழீழ விடுதலைப்போராட்டம் முறியடிக்கப்படவேண்டுமாயின், தமிழீழ மக்களின் ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டம் முறியடிக்கப்படவேண்டும். தமிழீழ மக்களின் ஆயுதம் தாங்கிய புரட்சிப்போராட்டம் முறியடிக்கப்படவேண்டுமாயின், தமிழீழ விடுதலைப் போராளிகள் அழிக்கப்பட்டு, அவர்களின் ஆயுதங்கள் பறிக்கப்படல்வேண்டும்</u>. ஆனால், கடந்தகால நடைமுறைகளில் இருந்து, சிறீ லங்கா படைகள் தமிழீழ விடுதலைப் போராளிகளை அழிக்கமுடியா நிலையே காணப்பட்டது. இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் போராளிகள் அழிக்கப்படவேண்டுமயின், மிகவும் பலம்பொருந்திய படைகள் அங்கு அனுப்பப்படவேண்டும். பலமான பெரும் படையை கொண்டு இரண்டுவிதத்தில் போராளிகளை அழிக்கமுடியும். அவையாவன:

1) போராளிகளை மிரட்டி, அழுத்தம்கொடுத்து அவர்களை நிராயுதபாணிகள் ஆக்குவ

2) போராளிகளிடம் இருந்து பலவந்தமாக ஆயுதங்களைப் பறிப்பது.

இந்த இரண்டு முறைகளிலும், இரண்டாவது முறை உடனடியாக பயன்படுத்தமுற்பட்டால், அங்கு இரண்டுவிதமான எதிர்ப்புக்கள் ஏற்படும்.

1) தமிழீழத்திலும், தமிழகத்திலும், இந்தியாவிலும் எதிர்ப்புக்கள் மக்களிடம் இருந்து ஏற்படுவது.

2) இந்தியாவிலும், சர்வதேசரீதியிலும் எதிர்புக்கள் ஏற்படுவது.

இந்த நிலையில், முதலாவது முறையிலேதான் விடுதலைப் போராளிகளை நிராயுதபாணிகள் ஆக்கவேண்டும் அல்லது அழிக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப்போராளிகளை தாக்கி, அழிப்பதாயின் அவை இரண்டு விதத்தில் மேற்கொள்ளமுடியும். அவையாவன:

1) இராணுவத்தினரை நேரடியாகப் பயன்படுத்துவது.

2) <u>இராணுவத்தினது பாதுகாப்பிலும், ஒத்துழைப்பிலும் தமிழ் கூலிப்படைகளை உபயோகிப்பது</u>.

இங்கும் இராணுவத்தினரை நேரடியாகப் பயன்படுத்துவது, முன்னர்போல் மக்களினது எதிர்ப்புக்களையும், சர்வதேச எதிர்ப்புக்களையும் உண்டுபடுத்தும். ஆகையால்,

https://tamileelamarchive.com/

இங்கு இரண்டாவது முறையையே முதலில் உபயோகிப்பது சிறந்தது. இந்த தமிழ் கூலிபடைகளைப்
ப்யன்படுத்துவதாயின், இப்படைகள் ஏற்கனவே திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கு
தான் நாம் பலகாலமாக இந்திய மத்திய அரசிலை TELO, EPRLF, PLOTE என்ற கோஷ்டி
கள் இந்தியாவில் சம்பளம் கொடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, TRISTAR என்ற பெயரில்
தமிழீழப் பிராந்தியங்களில் இந்திய மத்திய அரசிலை விடப்பட்டிருப்பதை அவதானிக்கவேண்டியுள்ள

மேலே குறிப்பிட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும், இந்திய துருப்புக்கள் தமிழீழப் பகு
களில் இறக்கப்படவேண்டியுள்ளது. மேலும், இந்தியத் துருப்புக்களினது உள்நோக்கமானது தமிழீழ
விடுதலைப் போராளிகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அழிப்பதாக இருக்கும்
போதிலும், உலக கண் துடைப்பிற்கும், தமிழீழ ம்க்களினதும், தமிழக மக்களினதும் எதிர்ப்புக்க
குறைப்பதற்கு அவை "சமாதானப் படை"களாகவே அங்கு செல்லவேண்டியுள்ளது. இந்தியத் துரு
புக்கள் சிறீ லங்காவின் பிராந்தியத்திலுள் நுழைவது இரண்டு நாடுகளுக்கு இடையில் உள்ள விடயமா
கையாலும், மிகவும் முக்கியமான விடயமாகையாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்
பட்டுள்ளது. பக்கம் 10 , பந்தி 6 இனைப் பார்க்கவும்.

அடுத்த படியாக, தமிழீழ விடுதலைப் போராளிகள் நேரடியாக அழிக்கப்படுவதன்
மூலமோ அல்லது, மறைமுகமாக, நிராயுதபாணிகள் ஆக்கப்படுவதன் மூலம் அழிக்கப்பட்டபின்னர், த
மீழ விடுதலைப் போராட்டம் தொடரமுடியாதபடி அங்கு ஒருவித அமைப்புமுறை நிறுவுப்படல்வே
டும். அப்படி நிறுவப்பட்ட அமைப்புமுறையின்கீழும், ஏதாவது ஆபத்து ஏற்படின் சிறீ லங்காவினது
பாதுகாப்பு இந்திய மத்திய அரசால் வழங்கப்படவும் வேண்டும். இவைகள் பற்றிய விபரங்களே
பக்கங்கள் 7, 8, 9, 10 என்பவற்றில் மிகவும் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஆனது அடிப்படையில் தமிழீழம் என்ற தனிநாடு உருவா
வதை தடுத்தும் நிறுத்தும் குறிக்கோளை உடையதாகவே இருப்பதால், அங்கு வைக்கப்படும் அர
யல் தீர்வானது போலியாகவே இருக்கவேண்டும். மேலும், அது தமிழீழத்தினை உருவாக்காது இ
ப்பதற்கு ஏற்ற வகையிலும் அமையவேண்டும். அதிலும், திருகோணமலை துறைமுகம் எக்காரணம்
கொண்டும் இந்தியாவினது கைகளில் இருக்கும் விதத்தில்தான் அந்த தீர்வு அமையவேண்டியுள்ளது.
இதனை மிகவும் சுலபமான ஒரு போலித்தீர்வின் மூலம் இந்திய, சிறீ லங்க அரசுகள் நடைமுறைப்
படுத்த திட்டமிட்டு, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

வடக்கையும், கிழக்கையும் இணைத்து ஒரு மாகாண சபையாக ஆக்குவதாகக் கூறும்
அதே வேளையில், 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு
முன்னரோ கிழக்கு மாகாணத்தில் இருக்கும் மக்களிடம், கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன்
இணைக்கப்பட்டு, ஒரு மாகாண சபைகீழ் இருப்பது விருப்பமா அல்லது கிழக்கு மாகாணம் வேறொ
ரு தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டு, தனிமாகாண சபைமூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது
விரும்பத்தக்கதா என்ற கருத்து வாக்கெடுப்பு நடைபெறும் என்ற நிபந்தனையும் புகுத்தப்பட்டுள்-
ளது. ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்ட நிலையிலும், தொடர்ந்தும் சிங்களக்
குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவிருக்கும் நிலையிலும், கிழக்கு மாகாணம் வடக்கிலிருந்து பிரிப்ப
தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றினைவிட, கருத்து வாக்கெடுப்புக் காலத்த
ற்கு முன்னர், கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில், முன்னர் ஏற்ப
டுத்திய கலவரம்போல், ஒரு கலவரத்தினை ஏற்படுத்தி வடக்கும், கிழக்கும் பிரிவதற்கு ஏற்ற
சூழ்நிலையை சுலபமாக ஏற்படுத்திக்கொள்ளமுடியும். மேலும், இந்த மாகாண சபைகளில் மித-
வாத சந்தர்ப்பவாத போலி அரசியல் வாதிகளையும், பூர்சுவாசிகளையும் அதிகார பீடத்தில்
ஏற்றிவைப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முறியடிக்கமுடியும். இவற்றினைச் செ
ய்வதற்கு பாதுகாப்பளிக்கும் ஒரு படையும் கைக்கூலிப் படையும் மிகமிக அவசியமாகிறது. இங்குப்
TRISTAR போன்ற கைக்கூலிப்படை மிகவும் உதவியாகவுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்-
டம் தொடராது பார்த்துக்கொள்வதற்கு தொடர்ந்தும் பொலீஸ் படைகளையும், இராணுவத்தின
ரையும் சிறீ லங்க அரசின் கீழ் வைத்துக்கொள்வதுடன், இந்தியப் படைகள் தங்கவும் அனுமதிகொ
டுத்தால் போதுமானதாகவே அமையும். ஆகவே, இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்
பாடுகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் எழுதப்படவும் வேண்டும், சில இரகசிய நடவடிக்கை
களும் மேற்கொள்ளப்படவும் வேண்டும். இவைகளே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பெரும்பகுதி-
யில் குறிப்பிடப்பட்டிருப்பதை ஒருவர் அவதானிக்க முடியும்.

இவைகளை எல்லாம் எழுத்து வடிவில் சுலபமாக எழுதக்கூடியதாக இருக்கும் போது
லும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்த முற்படும்போதுதான் பல சிக்கல்களை
இந்திய மத்திய அரசும், சிறீ லங்க அரசும் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக, இந்திய மத்திய அரசினாலும், சிறீ லங்க அரசினாலும் முன்வைக்கப்படும்
போலித் தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழீழ மக்கள் முதலில் அங்கீகாரம் வழங்கவேண்டு
தமிழீழ மக்கள் இதனை அங்கீகரித்துள்ளனர் என உலகிற்குக் காட்டியபின்னரே அவற்றை நடைமுறை
படுத்த முற்படுவது சுலபமாகும். இப்பிரச்சனையை இந்திய மத்திய அரசும், சிறீ லங்க அரசும்
மிகவும் சுலபமான முறையில் தீர்த்துக்கொள்ளமுடியும்.

கைக்கூலிக் கும்பல்களான TELO, EPRLF, PLOTE , தமிழர் விடுதலைக் கூட்டணி
யின்ரைக்கொண்டு இந்த போலித் தீர்வினை ஏற்றுக்கொள்ளவைத்து உலகிற்கு பிரசாரத்தினை மே
கொண்டபின்னர், விடுதலைப் புலிகளை மிரட்டி, அழுத்தம் கொடுப்பதற்கும், இயலாத பட்சத்தி
சிறீ லங்கா அரசிடம் ஒப்படைப்பதற்கும் ஏற்ற வகையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை எழு
க்கொண்டு, திட்டமிட்ட சதி வேலைகள் மேற்கொள்வதன்மூலம் இவற்றை நடைமுறைப்படுத்தமுடி

https://tamileelamarchive.com/

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இந்த ஏற்பாடுகள் பக்கம் 11இல், பந்தி 3 இல், பகுதி 1இன் மூலமும், பக்கங்கள் 10, 11 என்பவற்றில் பந்தி 2.16 இன்கீழ் A, B, C, D, E என்பவைமூலமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (மேலும், திட்டமிட்டபடி, விடுதலைப் புலிகள் பிரபாகரன் டில்லி அழைக்கப்பட்டு, ஏனைய போலி இயக்கங்களும், கூட்டணியினரும் போலித் தீர்வினை ஏற்று கைச்சாத்திட்ட பின்னர் விடுதலைப் புலிகள் மிரட்டப்பட்டபோதும் அவர்கள் போலித் தீர்வினை ஏற்க மறுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதைவிட, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும், ஏனைய பொறுப்பான அங்கத்தவர்களும் ஆலோசனைக்கென டில்லி எடுத்துச்செல்லப்பட்ட பின்னரே இந்த வித ஏற்பாடுகள் அடங்கிய இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டதென்பதும், ஒன்பது நாட்கள் அவர்கள் டில்லியில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும், தலைவர் பிரபாகரனை தமிழீழம் திரும்பவிட அனுமதிக்கும்படி தமிழீழத்தில் விடுதலைப் புலிகளும், வெளிநாடுகளில் தமிழீழ மக்கள் கோரிக்கைகள் விட்டு, ஆர்ப்பாட்டங்கள் செய்தமையும் எமது மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை முறியடிக்கும் நோக்கில் ஒரு போலித் தீர்வினை முன்வைத்து, போலி அமைதியை நிலைநாட்டி, விடுதலைப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கி, நீண்ட காலக்கண்ணோட்டத்தில் பூர்சுவாசிகளையும், சந்தர்பவாதக்கும்பல்களையும் மாகாண சபைகளில் ஆட்சிப் பீடத்தில் இருத்த முற்படும் போது, விடுதலைப் போராளிகள் அழிக்கப்படும் சூழ்நிலைகளோ அல்லது முற்றாக நிராயுதபாணிகள் ஆக்கப்படும் சூழ்நிலைகளோ அங்கு சரியாக உருவாக்கப்படாவிடின், தமிழீழ விடுதலைப் போராட்டம் முற்றாக முறியடிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அற்ற நிலை ஏற்படுவதுடன், கைப்பொம்மைகளை அரசியல் அதிகாரத்திலும் ஏற்றுவது பெரும் பிரச்சனையாகவே அமையும். தமிழீழத்தில் விடுதலைக்குப் போராடிவரும் விடுதலை வீரர்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவகையில் தமது செயற்பாடுகளை இராஜ தந்திர ரீதியில் மேற்கொண்டு, தம்மை அழிக்கமுடியாதபடி ஆக்குவார்களாயின், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தமிழீழ விடுதலைப் போராட்டம் முற்றுமுழுதாக முறியடிக்கப்படுவது முடியாத காரியமாகும். இந்த நிலையில், <u>நாசகார வேலைகளே பெரும்பாலும் இந்திய மத்திய அரசினாலும், அதன் கைக்கூலிகளாலும் மேற்கொள்ளவேண்டிநேரிடும்.</u> இப்படியான வேலைகளைச் செய்வதற்கும் சந்தர்ப்ப சூழ் நிலைகள் உருவாக்கப்படவே வேண்டும். சுருங்கக் கூறினால், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முறியடிக்கமுற்பட்டுள்ள இந்திய மத்திய அரசும், சிறீ லங்க பாசிச அரசும் இன்று தமிழீழ விடுதலைக்குப் போராடிவரும் போராளிகளுடனும், தமிழீழ மக்களுடனும் இராஜதந்திர சதுரங்க ஆட்டத்தினை நடாத்துகின்றன. <u>இரு அரசுகளும் தோல்வியடைவாக்களேயாயின் இரத்தக் களரியை ஏற்படுத்துவர்.</u> இந்திய மத்திய அரசும், சிறீ லங்க அரசும் போலி அமைதியையும், போலி தீர்வினையும் தமிழீழ மக்கள் முன் வைத்து, சந்தர்பவாத கூட்டணியினரையும், கைக்கூலிக் கும்பல்களையும் பாவித்து தமிழீழ மக்களையும், உலகினையும் ஏமாற்றி தமிழீழ மக்களை நிரந்தர அடிமை நிலைக்கும், அழிவுப்பாதைக்கும் தள்ளமுற்படுகின்றன. தமிழீழ மக்களைப் பலிக்கடாக்கள் ஆக்கும் திணிப்பு நடவடிக்கையையும், போலித் தீர்வினையும் மிகவும் சந்தோசமாக ஏற்று, கைச்சாத்திட்ட பெரும் துரோகிகளான அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணிக் கும்பலும், கைக்கூலிக் கும்பல்களும், தமிழீழ மக்களின் விடுதலையையும், சுதந்திரத்தையும் தூக்கியெறிந்து போலித்தீர்வினை ஏற்றும், விடுதலைப் புலிகளை கண்டித்தும் அறிக்கைகள் விடுவதும், பொய்ப்பிரசாரங்கள் மேற்கொள்வதும் இக்கும்பல்களின் துரோகத் தனத்தை அப்பட்டமாகக் காட்டுவதுடன், அதிகார வேட்கையில் ஆடும் பொம்மலாட்டத்தையே உறுதிப்படுத்துகிறது.

தமிழீழ மக்களே.!

நாம் தொடர்ந்தும் அறியாமையில் மூழ்கிக் கிடக்கக்கூடாது. இந்திய-இலங்கை ஒப்பந்தத் திணிப்பினாலும், போலிக்கும்பல்களது துரோகச் செயல்களாலும் எமது மக்கள் நிரந்தர அடிமைத்தனத்துள் தள்ளப்பட்டு, அழிவதை நாம் தடுத்து நிறுத்தவேண்டும். இந்திய மத்திய அரசின் சுத்த சுயநலபோக்கினால் எமது மக்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவதை நாம் தடுத்து நிறுத்தவேண்டும். <u>எமது மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்திற்கும், நசுக்கப்பட்டுவரும் எமது மக்களின் விடுதலைக்கும் நாம் எமது பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்து, எமது சுயநலங்களை கைவிட்டு போராடவேண்டும். செயற்படவேண்டும்.</u> நாமும் எமது முன்னைய தலைமுறைகளைப்போல் அறியாமையாலும், சுயநலபோக்காலும் கட்டுண்டு எமது பாரச்சுமைகளை எமது வருங்காலச் சந்ததியினர்மீது திணிக்கக்கூடாது. சுரண்டப்பட்ட, நசுக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட எமது மக்களின் விடுதலைப் போராட்டம் நீதியானது. தர்மமானது. மகத்தானது. மனிதராகப் பிறந்த எமது மக்கள் தமது விடுதலைக்குப் போராடவும், தமது வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ளவும் உரிமை உண்டு. இந்த உரிமையை எந்தவொரு சக்தியும் பறித்துவிட முடியாது. நாம் இந்திய மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்திய மக்களுக்கு இருக்கும் அதே சுயநிர்ணய உரிமைகள் எமக்கும் உண்டு என்பதையே நாம் வலியுறுத்துகிறோம். நாம் இந்திய மத்திய அரசிற்கு எதிரானவர்கள் அல்ல, நாம் இந்திய மத்திய அரசு தனது சுய இலாபங்களுக்காக தமிழீழ மக்களை நிரந்தர அடிமைகளாக்க முற்படும் நீதியற்ற சுத்த சுயநலபோக்கினையே நிராகரிக்கிறோம். தமிழீழ மக்களே. நாம் ஏகாதிபத்திய கைக்கூலிகளின் நாசகார சதிமுயற்சிகளை ஒருங்கிணைந்து முறியடிப்போம். ஏகாதிபத்தியங்களின் பூர்சுவாசிய கைக்கூலிக் கும்பல்களைச் செயலிழக்க வைப்போம். நசுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட எமது மக்களின் நீதியான, மேன்